புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==================================================================

# திருநங்கைகளின் இறப்புச் சடங்கு முறைகள்

==================================================================

ஆய்வாளர்
ப.காவியா,
322PHD242F337TAM
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்.

ஆய்வு நெறியாளர்
முனைவர் ம.சரளாதேவி,
உதவிப் பேராசிரியர் (சுழற்சி-2),
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்.

(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**முன்னுரை**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் தோன்றியது. மனித இனம் தோன்றிய போதே திருநங்கைகளும் தோன்றி விட்டனர். ஆண், பெண் என்ற பாலின பாகுபாட்டில் இருந்து சற்று பால் திரிபு கொண்டவர்கள் தான் திருநங்கைகள். தொல்காப்பிய காலத்திலேயே மட்டுமின்றி தொடர்ந்து வந்த இலக்கணங்கள், நிகண்டுகள், அகராதிகள் மூன்றாம் பாலினத்தவர்களைப் பற்றி பேசுகிறது.

திருநங்கைகளின் உலகம் முழுவதும் வேறுபட்டது. வாழ்க்கை நிலை முதல் இறுதி நிலை வரையில் அனைத்தும் வித்தியாசமாக இருக்கும். இறப்பு என்பது எல்லா உயிர்களுக்கும் நிலையானது. மனிதன் அந்தந்த மதத்திற்கு ஏற்ப இறப்புச் சடங்குகளை மேற்கொள்கின்றான். ஆனால் திருநங்கைகளின் இறப்புச் சடங்கானது சற்று வித்தியாசமாக இருக்கும்.

'' யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா

மோதலும் தணிதலும் அவற்றோர  ரன்ன

சாதலும் புதுவது அன்றே வாழ்தல்''(புறம்-192).

இதில் கணியன் பூங்குன்றனார் சாதல் என்பது புதியது இல்லை என்று கூறுகிறார். மனித உயிரினத்தில் மட்டுமே சடங்கு முறைகள் நடைபெறுகிறது. நாம் கருதும் மூன்றாம் பாலினத்தவர்களின் இறப்புச் சடங்கானது முழுவதும் வித்தியாசமாக இருக்கும். மேலும் இவை சக திருநங்கைகளால் மட்டுமே நடைபெறுகிறது. காலங்களின் மாறுதலுக்கு ஏற்ப இந்த இறப்புச் சடங்கானதும் மாறிக்கொண்டே இருக்கிறது. திருநங்கைகளின் இறப்புச் சடங்கு முறையை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**பழங்கால முறையில் இறப்புச் சடங்கு முறைகள்**

இங்கு மதத்தின் அடிப்படையிலேயே பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் நடைபெறுகின்றன. ஆனால் திருநங்கைகளுக்கு எந்த மதமும் கிடையாது. அவர்கள் ஒரே குடும்பமாக வாழ்கிறார்கள். திருநங்கைகள் இறப்புச் சடங்கை ''மட்டை'' என அழைக்கின்றனர். காரணம், தென்னங்கீற்று மட்டையால் வேயப்பட்ட பாடையில் உடலை எடுத்துச் செல்கின்றனர். ஒரு திருநங்கை இறந்து விட்டால் முதலில் ஆன்மாவை விடுவிக்கும் செயல்முறை நடக்கும்.

பிறகு அவர்களின் கடவுளான அரவானுக்கு பூஜை செய்து நன்றி கூறுவார்கள். காரணம், இதுபோன்ற பிறப்பு இனிமேல் உனக்கு வரக்கூடாது என்று  அரவானை வணங்குவார்கள். திருநங்கையின் உடலானது வெள்ளைத் துணியால் மூடப்பட்டு இருக்கும். கயிற்றினைக் கொண்டு உடலைக் கட்ட மாட்டார்கள். ஏனெனில் அவருடைய ஆன்மா சுதந்திரமாக இருக்க இப்படி செய்யப்படுகிறது. திருநங்கைகளின் சமூகத்தில் மட்டுமே இறப்பைக் கொண்டாடுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் அனுபவித்த பிரச்சனை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்தல் போன்ற மோசமான நிலையைக் கடந்து ஒரு திருநங்கை வாழ்கிறார்.

**இறந்த பிறகு நடக்கும் சடங்குகள்**

திருநங்கை  இறந்த பிறகு இப்படி ஒரு பிறப்பு இனிமேல் நீ பிறக்கவே கூடாது என்று அரவானை வணங்குகின்றனர். இறுதி ஊர்வலத்திற்கு முன்பு இறந்தவரின் உடலை செருப்பால் அடிப்பர். இப்படி ஒரு பிறப்பு மீண்டும் வரக்கூடாது என்பதற்காக, ஆனால் இறுதி ஊர்வலமானது பகலில் நடைபெறுவது இல்லை. இரவில் மட்டுமே நடைபெறும். அங்கு ஆண்கள் யாரும் வர மாட்டார்கள். இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட எல்லா திருநங்கைகளும் ஒரு வாரம் வரையில் துக்கம் அனுசரிப்பார்கள். விரதம் இருப்பார்கள். இறந்தவர் முக்தியடைய உடலை புதைத்து விடுகின்றனர். இறந்தவரின் மகள்கள் முப்பது நாட்கள் வெள்ளைப் புடவை அணிய வேண்டும். அப்படி முப்பது  நாட்கள் புடவை அணியவில்லை என்றால் இறந்தவர் தொல்லை தருவார் என நம்புகின்றனர்.

மகள்கள் முப்பது நாட்களுக்கு விரதம் இருந்து காக்கைக்குச்  சோறிடல் வேண்டும். இறந்த திருநங்கை காக்கை வடிவில் வந்து உணவருந்தி செல்வர் என்ற நம்பிக்கை உண்டு. முப்பதாம் நாள் கருமாதி செய்வார்கள். இறந்தவரின் மருமகள்களை அழைத்து எதிர்ப்பு பிரிவு திருநங்கைகள் வளையல் புடவையை

எடுத்து வந்து அவர்களுக்குக் கட்டி விடுவார்கள். அனைவரும் புடவை கட்டிக்கொண்டு ஒப்பாரிப் பாடல் பாடி சூடம் ஏற்றி வழிபாடு செய்து சடங்கை நிறைவு செய்கின்றனர். கருமாதி செய்யும்போது எதிர் பிரிவு திருநங்கைகள் மொய் எழுதும் வழக்கமும் உண்டு. இவர்களின் ஒப்பாரி பாடல்கள் பொதுவாக துக்கம் மற்றும் இழப்பை வெளிப்படுத்தும் வகையிலேயே இருக்கிறது.

**"ஆணாகப் பிறந்திருந்தா அரசனா ஆயிருப்பே**

**பெண்ணாப் பிறந்திருந்தா புருஷன் வீடு போயிருப்பே**

**காயாய்ப் பிறந்திருந்தா கனியாய் கனிந்திருப்பே**

**செடியாய்ப் பிறந்திருந்தா கொடியாய் மலர்ந்திருப்பே**

**நதியாய் பிறந்திருந்தா அதன் வழி நடந்திருப்பே**

**நண்டாய்ப் பிறந்திருந்தா வலையிலே தங்கியிருப்பே**

**ரெண்டாப் பொறந்ததினாலே துண்டுபட்டு நிக்கேனே"**

இது போன்ற ஒப்பாரிப் பாடல்களைப் பாடி தங்களின் வேதனைகளை வெளிப்படுத்துகின்றனர்.

இதன் பிறகு நடக்கும் ஜமாத் கூட்டத்தில் இறந்தவரின் சொத்து மதிப்பு கணக்கெடுக்கப்பட்டு இறந்தவருடன் கடைசி காலத்தில் நெருக்கமாக இருந்து கவனித்துக் கொண்டவர்க்கு பணிவிடைக்கு ஏற்றவாறு சொத்துக்களை கொடுப்பார்கள். மீதமிருப்பதை மற்றவர்களுக்குப் பிரித்துத் தருவார்கள். இறந்தவர் ஒரு குழுவின் தலைவியாக இருந்தால் அவருக்கு உதவியாக இருந்தவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இறந்தவரின் மகள்கள் அதே குழுவிலும் இருக்கலாம்.

விருப்பம் இல்லையெனில் வேறு குழுவிலும் சேர்ந்து கொள்ளலாம். இது அவரவர்களுடைய விருப்பம் ஆகும். எல்லாத் திருநங்கைகளும் சந்தோஷமாக ஆடிப்பாடி இருக்கிறார்கள். காரணம் அவர்கள் இறப்பைக் கொண்டாடுகிறார்கள். மேலும் இறந்தவர் வயது முதியவராக இருந்தால் மட்டுமே உடலைப் புதைக்கின்றனர். இளம் வயதில் இருக்கும் திருநங்கை யாராவது இறந்தால் அவர்களின் உடல் தகனம் செய்யப்படுகிறது.

**திருநங்கைகள் பாசத்திற்கு அடிமை**

பெரும்பாலும் திருநங்கைகள் ஏங்குவது பாசத்திற்கு தான்.அதனால் தான் ஆண்கள் இவர்களை எளிமையாக ஏமாற்றி விடுகிறார்கள். காதலித்து திருமணம் செய்து கொள்கிறேன் என்று திருநங்கைகளை நம்ப வைத்து மோசம் செய்கின்றனர். ஆண்கள் தான் உலகம் என்று இவர்களும் நம்பி ஏமாறுகிறார்கள். பிறகு தான் தன்னுடைய தவற்றை உணர்ந்து மனம் உடைகிறார்கள்.

பெரும்பாலான ஆண்கள் உடல் இச்சைக்காக மட்டுமே திருநங்கைகளை நாடுகின்றனர். இன்னும் சில ஆண்கள் பணம், நகை போன்றவற்றை பெற்றுக் கொண்டு இவர்களை ஏமாற்றி விடுகின்றனர். திருநங்கைகளை ஆசை வார்த்தை பேசி அனைவரும் மயக்குகின்றனர். பாசத்திற்காக ஏங்கும் திருநங்கைகள் இதனை உண்மை என நினைத்துச் செல்கின்றனர்.

கடைசியில் எல்லா ஆண்களும் ஏமாற்றிச் செல்ல காரணம் உன்னால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது. இந்த ஒரு காரணத்தை மட்டுமே வைத்து விட்டுச் செல்கின்றனர். அதனாலேயே பல திருநங்கைகள் மனம் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

**யாருமில்லா அத்து வானம்**

**வெயில் அடிச்ச மத்தியானம்**

**நெஞ்சாட்டம் நின்னியே எம் பொன்னே**

**கண்ணிரண்டு ஏக்கத்தோட**

**நெஞ்சோட பாசத்தோட**

**அம்மான்னு கூப்பிட்டியே என் கண்ணு**

**அன்னிக்கே போடியின்னு**

**நான் தொரத்தி போயிருந்தா**

**இன்று அழுத பொலம்ப மாட்டேனே.....**

**காலுரண்ட விரிச்சி வச்சி**

**வெந்நீர சுடவச்சி விடாம**

**அடிச்சங்கண்ணு தண்ணி வரல.....**

**இப்ப மாலை போட்ட கழுத்த கண்டு**

**மஞ்ச வச்ச முகம் கண்டு**

**ஆத்தா நீ அழுறது தண்ணி வத்தல..**

**காட்டு மலர போல**

**வாசம் நெறஞ்சியே**

**காதல் மனுச நுழைய**

**சாக துணிஞ்சியே**

**உசுரெல்லாம் எறியுதடி**

**கருவில நான் சுமக்கலையே**

**உசுருல தான் கோர்த்தேனே**

**சிரிச்ச கண்ணு மறக்கமுன்னு**

**நெருப்பில நீ தூங்கப் போனாயே அடி நீ.....**

**ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ**

இந்தப் பாடலானது ஒரு இளம் திருநங்கை காதல் வயப்பட்டு இறுதியில் ஒரு ஆணால் ஏமாற்றம் அடைந்து அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறாள். அவளை நினைத்து மற்ற திருநங்கைகள் இந்தப் பாடலை பாடுகின்றனர். அனைவரும் இவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி முடியவில்லை என்றால் அவர்களுடைய உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டாம். அவர்களும் மனிதர்கள் தான். இந்தச் சமூகத்தில் திருநங்கைகளுக்கும் இடம் உண்டு. அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும்.

**திருநங்கைகளின் தற்கால நிலை**

இன்றைய காலத்தில் திருநங்கைகளை அப்படியே சுடுகாட்டிற்குள் அனுமதிப்பதில்லை. இன்னும் இந்த ஏளனப் பார்வையானது மக்களிடையே இருக்கிறது. சமூகமானது இவர்களை முழுவதுமாக ஒதுக்கும் நோக்கத்திலேயே இன்றளவும் எதிர்பார்க்கிறது. சுடுகாட்டிற்குச் செல்வதற்கு முன்னால் அரிசி மாவை வைத்து ஆணுறுப்பை போன்ற ஒரு பொம்மையை செய்வார்கள் பிறகு அவற்றை இறந்தவர் பிறப்பு உறுப்பின் அருகில் வைத்து சில சடங்குகளைச் செய்கின்றனர். இறந்தவரின் மகள்களுக்கு வளையல்கள் போட்டு விடுவர். காரியம் செய்யும் நாளன்று அதை உடைப்பார்கள்.

திருநங்கைகளை அப்படியே சுடுகாட்டுக்குள் வெட்டியான் அனுமதிப்பதே இல்லை. அந்தச் சடங்குகளை எல்லாம் செய்த பிறகு தான் திருநங்கையின் உடலானது சுடுகாட்டிற்குள் வரும். காலத்திற்கு ஏற்பச் சடங்கு முறைகளும் மாறிக்கொண்டே வருகிறது. இறந்த திருநங்கையின் மத வழக்கப்படியே இறுதி மரியாதை செய்யப்படுகிறது.

இன்றைய காலத்தில் ஆண்களும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்கின்றனர். ஆனால் இறப்புச் சடங்கு என்பது சாதாரண முறையில் நடைபெறுகிறது. மற்ற மக்கள் செய்கின்ற முறையிலேயே திருநங்கைகளும் தங்களுடைய இறுதிச் சடங்கை செய்து வருகின்றனர்.

தற்போதைய நிலையில் திருநங்கைகள் இறந்தால் அவரவர் மதத்தின் அடிப்படையிலேயே சடங்குகளை மேற்கொள்கின்றனர். இதுவே மிகப்பெரிய மாற்றம் ஆகும். கிறிஸ்துவராக இருந்தால் கல்லறைக்கு எடுத்துச் சென்று இறுதிச் சடங்கைச் செய்கின்றனர். முஸ்லிமாக இருந்தால் மசூதிக்கு எடுத்துச் சென்று இறுதிச் சடங்கை மேற்கொள்கின்றனர். ஆனால் மதத்தின் அடிப்படையில்லாமல் அனைத்து திருநங்கைகளும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வார்கள்.

இதுவே இன்றைய நிலையில் திருநங்கைகளின் இறப்புச் சடங்கில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். பண்டைய காலத்தில் திருநங்கைகளின் இறப்புச் சடங்கு எவ்வாறு இருந்தது அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இன்றைய காலத்தில் திருநங்கைகளின் இறப்புச் சடங்கு முறை போன்றவற்றை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**துணைநூற் பட்டியல்**


1.புலியூர்க் கேசிகன், புறநானூறு.சாரதா பதிப்பகம்,(2006).

2. சூ.ம செயசீலன், திருநங்கைகளின் வாழ்வியல் இறையியல், வைகறை பதிப்பகம், சென்னை.

3. பிரியா பாபு, மூன்றாம் பாலின் முகம், சந்தியா பதிப்பகம், சென்னை.

4. கள ஆய்வுப் பாடல், கயல்விழி, திருப்பத்தூர்.